JET1-2-TA

# தாங்கமுடியாத வேதனையை, இயலாமையை வியாதியை எதிர்கொள்ள தேவன் உங்களுக்கு எங்ஙனம் உதவிடுவார் - நிகழ்ச்சி 2

**அறிவிப்பாளர்:** இன்றைக்கு ஜான் அன்கேர்பெர்க் நிகழ்ச்சியில்: கடுமையான வேதனையில் இயலாமையில் அந்த வருத்தத்தை கையாள தேவன் எப்படி உதவிடுவார்.

**டாக்டர் மைக்கேல் எஸ்லே:** எனக்கு நல்லா ஞாபகமிருக்கு சோபால உட்கார்ந்து சின்டிகிட்ட இத பத்தி பேசீட்டு இருந்தேன், வேதனையை தாங்க முடியாததால என்னோட கன்னத்தில் தாரைதாரையாக கண்ணீர் வந்தது மருந்துகளினால் உண்டான இடையூரல்கள், என்ன நடக்கும், இதை எப்படி செய்யப்போகிறோம்? இதை எப்படி கடக்க போகிறோம்?

ஜோனி எரிக்சன் டாடா: அப்போஸ்தலனாகிய பவுல் ஆசியாவில் இருக்கும் சகோதரர்களுக்கு எழுதுகிறார், அவர் சொல்லும்போது சொல்கிறார், “எங்கள் பாடுகளை குறித்து நீங்கள் அறியாதிருக்க எங்களுக்கு மனதில்லை, என்னவெனில் பிழைப்போம் என்கிற நம்பிக்கை அற்றுபோகத்தக்கதாக எங்கள் பலத்திற்கு மிஞ்சின அதிக

பாரமான வருத்தம் எங்களுக்கு உண்டாயிற்று." ஹலோ, இதை நா அனுபவித்திருப்பதால எனக்கு இதை பற்றி தெரியும்.

**அறிவிப்பாளர்:** என்னுடைய விருந்தினர்கள்: ஜோனி எரிக்சன் டாடா, ஜோனி மற்றும் நண்பர்கள் என்கிற , மாற்றுத்திரனாளிகளுக்கான சர்வதேச ஊழியங்களின் ஸ்தாபகர் மற்றும் Dr. மைக்கேல் எஸ்லே, முதன்மை தலைவர் மூடி வேதாகம கழகம் மற்றும் பெல்லோஷிப் பைபிள் திருச்சபையின் போதகர் பிரன்ட்வுட், டென்னசி. தி ஜான் அன்கேர்பேர்க் நிகழ்ச்சியின் இந்த விசேஷித்த தொகுப்பை பார்க்க உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

*****

டாக்டர். ஜான் அன்கேர்பெர்க்: நிகழ்ச்சிக்கு உங்களை வரவேற்கிறோம். நீங்கள் கேள்விபட்டது போல, இன்றைக்கு நம்முடன் இரண்டு விருந்தினர்கள் இருக்கிறார்கள். நம் மத்தியில் ஜோனி எரிக்சன் டாடா மற்றும் இன்னொருவரான Dr. மைக்கேல் எஸ்லே இருக்கிறார். மேலும் இன்றைக்கு நாம் மைக்கேல் உடன் பேசிட இருக்கிறோம், அது சுவாரஸ்யமான தலைப்பாகும். மைக்கேல் எப்போதும் ஒரு தீராத வேதனையோடு இருந்தார். ஜோனியும் அப்படிதான், அதைப்போலவே இதை பார்த்துக்கொண்டிருப்பவர்களில் சிலர் இருக்கிறீர்கள். எல்லா வாசல்களும் அடைபட்டிருக்கும் நிலையில் என்ன செய்வீர்கள், உங்க கணவரால உங்களுக்கு உதவ

முடியாது, உங்க மனைவியால உங்களுக்கு உதவ முடியாது, உங்களுடைய உயிர் நம்பரால உதவ முடியாது, உங்க மருத்துவரால உங்களுக்கு உதவ முடியாதும் உங்கள் மேல் அதிகாரம் உள்ளவர்கள் உங்களுக்கு உதவ முடியாது, உங்க சபை உங்களுக்கு உதவிடாது. நீங்களும் தேவனும் மட்டும் இருக்கிறீர்கள்? அப்படி பட்ட சூழ்நிலையில் இப்போது நிற்கிறீர்களா?

கடந்த சில வருடங்களாக உங்களுடைய வாழ்வில் உங்களுக்கு ஏற்ப்பட்ட சம்பவங்களை நீங்கள் பகிர்ந்துகொள்ளும்படியாக விரும்புகிறேன். இன்னொரு விஷயத்தையும் அவர்களுக்கு சொல்லவேண்டும், ஒவ்வொருநாளும் ஆயிரம் வானொலி அலைவரிசைகளில் நான் தோன்றுவதற்கு நீங்கதா பொறுப்பாக இருக்கீங்க, ஓகே. இவர்தான் எங்கிட்ட அதை சொன்னவர், “அன்கேர்பேர்க், நீ கட்டாயமா இதை செய்யவேண்டும்.” இரண்டு பேரும் சேர்ந்து ஒரு புத்தகத்தை எழுதினோம், அதை பற்றி தெரிந்துகொள்வதற்கு முன்பு, இதை செய்ய ஆரம்பித்து விட்டேன்,அதனால தேவன் இதை போருப்பேடுத்துகொண்டு இன்றைக்கு உலகம் முழுவதும் கொண்டு செல்கிறார். அதற்கு இவர்தான் காரணமாக இருக்கிறார். ஆனா, இதற்கு இடையில், பலவிஷயங்கள் நடந்தது. என்ன நடந்து என்று நீங்களே சொல்லும்படி விரும்புகிறேன்.

**எஸ்லே:** சரி, துவத்துல நீங்க சொன்னீங்க "அருமையான நிகழ்ச்சி" தீராத வேதனையில் வாழ்வதை பற்றியது. சரி, அதாவது, அதை நான் மறுக்கிறேன். அது தவறானது. (சிரிப்பு) அது 2001 என நினைக்கிறேன், எனது இடுப்பு பகுதி வலிக்க தொடங்கியது. வாரத்துல 3 முறை நா ராக்கெட் பந்து விளையாடுவது வழக்கம். சிறந்த பயிற்சியாளர் எனக்கு இருந்தாங்க. நாற்பது வயதிலும் நல்ல உடல் கட்டமைப்பில் நான் இருந்தேன். கொஞ்சம் கொஞ்சமா எனக்கு இடுப்புக்கு கீழ பிரச்சனை இருப்பதை கண்டறிந்தார்கள், L - 4-5, S-1, போன்ற இடங்களில். அதனால அந்த பகுதியில் 2 அறுவை சிகிச்சை செய்யப்பட்டது அதனால காலின் கீழ் பகுதியில் தீராத வேதனையும் வலியும் அனுபவித்து கொண்டிருந்தேன், அப்படிதான் இருக்குமாம்.

அதற்கு பிறகு 2008 ல, சின்டியும் நானும் மருத்துவத்திற்காக பிரயாணிக்க ஆரம்பித்தோம். செல்வாக்குடைய சில நண்பர்கள் எங்களுக்கு இருக்கிறார்கள், அதனால அமெரிககாவில் உள்ள அந்து சிறந்த தண்டுவட நிபுணர்களான மருத்துவர்களிடம் சென்றோம். அவங்க எல்லாருமே ஒரு கட்டத்துல ஒரே மாதிரிதான் சொன்னாங்க என்னுடைய கழுத்து பகுதியில் ஒரு பெரிய அறுவை சிகிச்சையை செய்யப்படவேண்டும், சர்விக்கள் பகுதியில் செய்யப்படவேண்டும். அது நல்ல செய்தியாக இருந்திருக்குமா அது, கேட்ட செய்திதான். இந்த எல்லா காரியங்களிலும், எனக்கு தீராத வேதனையும் வலியும் இருக்கும் மருத்துவர்களும் மருந்துகளும் மற்றவர்களும்

அவர்களுடைய கருத்துப்படி இருப்பார்கள். அதாவது, சின்டி உண்மையில் சிறந்த மனைவி, எனக்கு தெரியும் கென்னும் சிறந்த கணவர்தான், ஆனா உங்களுக்கும் தேவனுக்கும் இடையில் இருக்கும் காரியங்களை சரி செய்வது உங்களுடைய கரத்தில் இருக்கிறது. அதுதான் சிலவேளைகளில் தனிமையான இடம் போலிருக்கும் - எப்போதென்றால் கடுமையான வேதனையில் மருத்துகள் உதவாத சமயங்கள், மாத்திரைகள் என்றால், பொதுவாக, நான் அதை திசைதிருப்பும் தெரபி என்பேன். அந்த வலியை நீங்க மறக்கிரதற்கு இவை புதிய பிரச்சனைகளை உண்டாக்கிடும், ஆனால் உண்மையில் அது உங்களுக்கு உதவியாக இருப்பதில்லை.

**ஆன்கர்பெர்க்:** இதை, கேளுங்க, நீங்க மூடி வேதாகம கழகத்தின் முதல்வராக இருந்தது எனக்கு நினைவிருக்கிறது. இன்றைக்கும் அமெரிககாவில் எங்களுக்கு கொடுக்கப்பட்ட சிறந்த பிரசங்கியார்களில் நீங்களும் ஒருவராக இருக்கிறீர்கள். உங்களுடைய பிரகத்தை கேட்க்க விரும்புவேன், அநேகர் உங்களுடைய உரையை விரும்புகிறார்கள், நீங்க ஒவ்வொரு மூலை முடுக்கிற்கும் பிரயாணிகிறீர்கள், உங்கள மாதிரி என்னால் நிச்சயம் முடியாது. நீங்க மூடியில் இருக்கும்போது ஒருநாளைக்கு சுமார் 10, 15 கூட்டங்களில் கலந்துகொள்வீர்கள். அதோட மூடியில் இருக்கும் மாணவர்களும் உங்களுக்காக இருக்கிறார்கள். அப்ப இந்த வலி துவங்கியது எனக்கு நினைவிருக்கிறது, அதற்கு சில மாத்திரைகளை எடுத்துகொண்டீர்கள்,

ஆனா அதனால் பிரயோசனமே இல்ல, தொடர்ந்து தீராத வேதனையில் இருந்தீங்க.

**எஸ்லே:** நா 170 பவுண்ட் இடை குறைந்துவிட்டேன். நா கிட்டதட்ட 200 பவுண்டுக்கு இருந்திருக்கணும். நிறைய மாத்திரைகளை எடுத்துகொள்ள துவங்கினேன், அதனால தாக்கு பிடித்துவன்தேன், ஆனா வாகனத்தை ஓட்ட முடியாது. நா சாப்பிட்ட மருந்துகளின் காரணமா எங்கூட யாராவது துணைக்கு வரவேண்டியது அவசியமானது. எனக்கு நியாபகமிருக்கு ஒரு சோப்பால உட்கார்ந்திருன்தேன், ரொம்ப நேரம் இருக்காதுன்னு நினைக்கிறேன், அப்ப சின்டி கூட பேசீட்டு இருந்தேன், என்னையே அறியாம இந்த தடுக்க முடியாத வேதனையினால் மருந்துகளின் பாதிப்பினால கண்களில் தாரைதாரையாய் கண்ணீர் வந்தது, எப்படி, நாம இதை பண்ணப்போகிறோம்? எப்படி இதை சகித்துகொள்வது? அவங்ககிட்ட சொன்னேன், அதாவது, “உண்மையா எனக்கு மாடியிலிருந்து குதிக்கணும்.” அது, தற்கொலை எண்ணம் கிடையாது. அது என்னோட நோக்கம் இல்லை, ஆனா அப்படி செய்தால் இது போயிடுமான்ற ஒரு நப்பாசை. இந்த வலியோட வாழ என்னால முடியல. தேவனே, இதுதான் என்னுடைய சீட்டாக இருந்தால், என்னை எடுத்துக்கொள்ளும். அப்ப அவங்க எங்கிட்ட ஒரு விஷயத்தை சொன்னாங்க, இதெல்லாம் அர்த்தத்தை உண்டாக்கும் சில சூழ்நிலைகள். அவங்க சொன்னாங்க, “உண்மை இதுதான்...” நா

கேட்டேன், “எப்படி, எப்படி இத தாங்க முடியும்? எப்படி இதை சகித்துகொள்வது, சின்டி?” அதற்கு அவங்க சொன்னாங்க, “நம்ம வாழ்க்கையை திரும்பி பார்க்கிறேன், இன்றைக்கு வரை தேவன் உண்மையாக இருந்திருக்கிறார். அவர் எப்படி தொடர்ந்து உண்மையுள்ளவராக இருந்து நடத்தாம போயிடுவார்?

**ஆன்கர்பெர்க்:** ஆமா. நீங்க சொன்னது எனக்கு பிடிச்சிருக்கு. எனக்கு நினைவுக்கு வந்த சில விஷயங்களில் ஒன்று இதுதான், நீங்க தேவனிடத்தில் எதுவுமே சொல்லலா, தேவன கேள்வியும் கேட்கவே இல்லை, இது எதற்காக நடந்தது? என் என்ற கேள்விக்கு நீங்க இடமே தரள, ஆனா உங்களுக்கு பிரதானமா தோன்றின கேள்வி இதுதான, இந்த உலகத்தில் இனி நா எப்படி சகஜமா ஒத்துப்போய் வாழமுடியும்?

**எஸ்லே:** நீங்க டாக்டருக்காக அந்த வெய்டிங் ரூம்ல உட்கார்ந்திருக்கும் போது பலவித மூல வியாதி பலவிதமான வேதனைகளோடு இருக்கும் மனிதர்களை பார்க்க முடியும். இதுவரைக்கும் ஏன் தேவனே என்ற கேள்வியை நான் கேட்டதில்லை. தேவனை குற்றப்படுத்தினது கிடையாது. எனக்கு தெரிந்த சில இறையியல் பதில்களை நான் பெற்றிருக்கிறேன், அதாவது, என்னுடைய கவனத்தை திருப்பிவிட்டேன். ஆனா நா, கேட்பேன், தேவனே, இதோட நா எப்படி வாழ முடியும்? அடுத்த நாளை என்னால் எப்படி எதிர்கொள்ள முடியும்? எப்படி என்னுடைய பிள்ளைகளை

அதட்டாம சின்டிய வேலை வாங்காம மக்களை கடினமா நடத்தாம அலுவல் கூட்டங்கள்ல வேலையாட்களை திட்டாம இருக்க முடியும்? ஏன்னா நீங்க அசௌவுகரியமான நிலையில் இருக்கும்போது, தொடர்ந்து கவனம் சிதரிகிட்டே இருக்கும். மின்தடை மாற்று மாதிரியிருக்கும், அதை நிறுத்தவே முடியாது, அதனால் புதிதா எதையாவது முயற்சிப்பீங்க. அப்படி நிலையில் வாழ்வது மிகவும் கடினமானது, ஆனா அநேகர் அப்படிதான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். அதனால் கேள்வி இதுதான், தேவனே, நா எப்பவும் சொல்லறது இதுதான், நா ஒரு அற்ப்புதத்தை கேட்கல, ஆனா அசையாத விசுவாசத்தை உடையவனாக இருக்க எனக்கு உதவி செய்யுங்க. அதாவது, லாசருவுக்கு ஒரு அற்ப்புதம் நடந்தது. அவன் மரணத்திலிருந்து உயிர்ப்பிக்கப்பட்டான். ஆனா அவன் மறுபடியும் மரிக்க வேண்டியிருந்தது. அது சரியான தீர்வாக நான் எப்போது நினைத்தது கிடையாது. அதனால, நிகழ்காலம் மற்றும் எதிர்கால நிலைகளுக்கு நடுவில் நான் எப்படி வாழ வேண்டும்?

**ஆன்கர்பெர்க்:** ஆமா. உங்க அறுவை சிகிச்சை முடிந்து வெளியில் வந்த போது, அப்ப, நீங்க அறுவை சிகிச்சைக்கு போறதுக்கு முன்னால இருந்தத பற்றி நாம பேசினோம். நா சொன்னேன், உங்களால நடக்க முடிந்தால், உங்களால எழுந்திருக்க முடிந்தால் போதும் - அவங்க உங்களுக்கு என்ன செய்தாகன்னு இன்னும் சில நிமிடங்கள்ள நீங்க பகிர்ந்திடலாம் - ஆனா அதுக்கு முன்னால, ஒருமுறை, நீங்க பில்லி

கிரஹாமின் இடத்திற்கு போய் அங்கே பேசவேண்டியிருந்தது. அந்த இடத்தில் உள்ளவர்களுக்கு முன்பாக தேவன் உங்களுக்கு இதிலிருந்து என்ன கற்றுகொடுத்தார் என்பதை பற்றிதான் பேசியிருப்பீர்கள். அதற்கு பிறகு அவர்களை வைத்து நீங்க பயிற்றுவிக்கப்பட்டிருப்பீர்கள். அதற்கு பிறகுதான் நீங்க இங்க வந்தீங்க, அந்த செய்திகள் எல்லாத்தையும் நான் கேட்டிருக்கிறேன். அது வியப்படைய வைத்தது, ஓகே. நடந்த காரியங்களை பற்றி நீங்க அந்த ஜனங்களோடு என்ன பேசினீர்கள் என்பதையும் இணைத்து சொல்லும்படியாக விரும்புகிறேன். நீங்க சொல்லியிருக்கீங்க, எல்லா மாத்திரைகளின் பெயர்களையும் சொன்னேங்க, அதை நீங்க சொல்ல விரும்புகிறேன், ஏன்னா பார்த்துகொண்டிருக்கும் நேயர்கள் கூட, அதை பற்றி தெரிந்திருப்பார்கள், சரியா. அந்த மாத்திரைகள் ஒன்றும் உங்களுக்கு பலன் கொடுக்காத போது, ஓகே, அப்ப நீங்க இயேசுவிடம் திரும்பியதாக சொன்னீங்க. இப்ப எனக்கு சொல்லுங்க, அதற்கு என்ன அர்த்தம்? எங்கிருந்து இந்த வரியை நீங்க பிடுத்துகொண்டீங்க? அதை விளக்கிடுங்கள்.

**எஸ்லே:** ஆமா, நிச்சயமா அது 2 முக்கிய பகுதிகள் தான், அதோட அதில் சிலவற்றை கடந்த வாரம் ஜோனி குரிப்பிட்டாங்க. ஆனா கிறிஸ்துவினுடைய போதனைகள் அதிக கடினமாக தோண்டியதால் சீஷர்கள் அவரை விட்டு விலகிட முயற்சித்து கொண்டிருந்தார்கள், அவர் பன்னிருவரையும் திரும்பி பார்த்து, “நீங்களும் போய்விட

மனதாயிருக்கிறீர்களோ என்றார்.” இது இயேசுவின் மனித தன்மையையும் அவரை சுற்றி இருந்தவர்களின் யதார்த்தை நிலையையும் விளக்கி சொல்கிறது. அதற்கு பேதுரு சொல்கிறார், “தேவனே, ஜீவ வார்த்தைகள் உம்மிடம் மட்டுமே இருக்கிறதே.” அதை விட்டு நாங்கள் எங்கே போவோம்? இந்த கட்டத்திற்கு நாம எப்ப வருவோமென்று தெரியுமா ஒபானா மற்றும் ஆக்சிகான்டின் மற்றும் லைரிகா அப்பறம், கபாபென்டின் மற்றும்  செளிப்ரேக்ஸ் என அவர்கள் நமக்கு கொடுக்கும் எந்த மாத்திரைகளும் பலன் தராமல் போகும்போது இந்த இடத்திற்கு வருவோம். எபிரெயரில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு பகுதிதான் எனக்கு தைரியத்தை கொடுக்கும் பகுதியாகும், அதாவது, நமக்கொரு பிரதான ஆசாரியர் இருக்கிறார். எபிரேயர் நிருபத்தின் ஆக்கியோன் இங்கு சொல்லியிருப்பது எனக்கு ரொம்ப பிடிக்கும், நாம கடந்து போகிற சூழ்நிலையை நன்கு புரிந்துகொண்டிருக்கும் பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார்.

**ஆன்கர்பெர்க்:** அதை நான் வாசிக்கிறேன், ஜனங்கள் பார்க்கும்படியாக திரையிலும் காண்பித்திடலாம், அதற்கு பிறகு உங்களுடைய கருத்துகளை பகிர்ந்துகொள்ளுங்கள். எபிரேயர் 4:14 “வானங்களின் வழியாய்ப் பரலோகத்திற்கு போன தேவகுமாரனாகிய இயேசு என்னும் மகா பிரதான ஆசாரியர் நமக்கு இருகிறபடியினால் நாம் பண்ணின அறிக்கையை உறுதியாய் பற்றிக்கொண்டிருக்க கடவோம். நம்முடைய பலவீனங்களைக் குறித்து பரிதபிக்ககூடாத

பிரதான ஆசாரியர் நமக்கிராமல், எல்லாவிதத்திலும் நம்மைப்போல் சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியரே நமக்கு இருக்கிறார். ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும் தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." இப்ப, இதை  பற்றி எங்களுக்கு சொல்லுங்க.

**எஸ்லே:** என்னை, பொறுத்தவரை, ஜான், இந்த பகுதியை நான் வாசிக்க ஆரம்பித்தது, மனப்பாடம் பண்ணினது எல்லாம் அறுவை சிகிச்சைகள் முடிந்து அந்த வலியில் இருந்து குணமடையும் அந்த நேரத்தில் தான், அதாவது, எனக்கு ஒரு ஆசாரியர் இருப்பதை பார்த்தேன், மகா பிரதான ஆசாரியர். ஆசாரியர் என்பவர் பரிந்துரையாளர். புதிய ஏற்பாட்டிலும் பழைய ஏற்பாட்டிலும், மகா பிரதான ஆசாரியர்கள் இருக்கிறார்கள், இப்ப இங்க வானங்களின் வழியாய் கடந்து போகிற ஒருவரை பற்றி நமக்கு சொல்லப்பட்டிருக்கிறது அவர்தான், இயேசு, தேவனுடைய குமாரன். முதலாவது என்ன சொல்லப்பட்ட  விஷயம் இதுதான் என்னை புரிந்துகொள்ள கூடிய ஒருவர் இருக்கிறார். உண்மையில், இதன் ஆக்கியோன் தொடர்ந்து அவர் நமக்காய் பரிதபிக்கிரவராக இருக்கிறார் என்று கூறுகிறார். பரிதபித்தல் என்று சொல்லப்படுவது ஏதோ ஒரு உணர்வாக அல்ல, நம்மோடு சேர்ந்து அதை அனுபவிக்கிறார், அந்த வார்த்தை " சம்பத்தீஸ்". பட்சாதாபம் அனுதாபம் போன்றவற்றை

கேள்விபட்டிருக்கிறோம், இதற்காக வருந்துகிறேன், என்னால புரிஞ்சுக்க முடியுது, கிறிஸ்து முற்றிலுமாய் அடையாளப்படுத்தி கொள்கிறார். அதனால் இந்த வழக்குரைஞர் எனக்கு இருக்கிறார், இந்த பிரதான ஆசாரியருக்கு எல்லாம் புரியும் தீராத வலி, மன அழுத்தம், சோர்வு, அன்பானவர்களை விட்டு பிரிந்து நிற்கும் மனநிலை, குழந்தையை பறிகொடுத்தல், நாம எதிர்கொள்ளும் எந்த பெரிய சோதனையாக இருந்தாலும் சரி. நம்ம வாழ்க்கையில் நடக்கும் என்ன விஷயமாக இருந்தாலும் சரி, MS, வியாதிகள், எல்லாவற்றையும் புரிந்துகொள்வார். அவரால உணரமுடியாத எந்த உணர்ச்சியின் நிலையும் கிடையாது. அதோடு, என்னுடைய இறையியல் மூளையின் படி, அதை அறிந்துகொள்வது ரொம்ப கஷ்டம், ஆனா இதை எவ்வளவாய் சொல்றேனோ, அந்த அளவுக்கு உயர்ந்த பிரதான ஆசாரியராக அவர் இருக்கிறார். அவர் எல்லாவற்றையும் புரிந்துகொள்கிறார் எனபது உண்மை.

மேலும் இங்கு சொல்லப்பட்டிருக்கிறது, “அறிக்கையை உறுதியாய் பற்றிகொள்ளக்கடவோம்.” என்னை கேட்கும் கேள்வி என்னன்னா, நீ எதை நம்புகிறாய்? சந்தர்ப்பங்கள் எல்லாம் கைவிட்ட சூழ்நிலையில், நா எதை விசுவாசிப்பதாக சொல்கிறேனோ அதை பற்றிக்கொண்டிருக்கிறேனா, என்னுடைய அனுபவங்கள் எனக்கு எதை போதித்தாலும் அதை விடாமல் இருக்கிறேனா? என்னுடைய அனுபவங்கள் அனைத்தும் இறையியலின் பக்கமாக வழிகாட்டுவது

அரிதாயிருக்கிறது. எனது அனுபவங்கள் தேவனை சந்தேகிக்க வைக்கும், சபையை சந்தேகிக்க வைக்கிறது, தேவ பிள்ளைகளை சந்தேகிக்க வைக்கிறது. எதற்காக இந்த சூழ்நிலைக்கு தள்ளப்பட்டேன், அப்படி பார்க்கும்போது இதெல்லாமே தவறுதானே? இந்த வலிகளை கட்டுப்படுத்தி ஏதாவது ஒரு வழி இருக்க வேண்டும் ஆண்டவரே. நா கடுமையானவனாக இருக்க விரும்பல. என்னை சூழ்ந்திருப்பது அசௌகரியமான விஷயமாக இருப்பது எனக்கு பிடிக்கல. ஆனா அவர் என்னோடு பரிதபிக்கிரவராக இருக்கிறார். எனக்கு எலும்பியல் நிபுணரான ஒரு அருமை நண்பர் இருக்கிறார். எனக்கு, என்னுடைய கழுத்து பகுதியில், பொதுவா 7 நிலையான முதுகெலும்புகள் இருக்கும் அவை அனைத்தும் C -3, 4, 5,6,7, T-1என்றிருக்கும். இப்ப அதெல்லாமே தன்னுடைய நிலையை விட்டு அகன்று விட்டது. அதனால் வாங்க இரும்பையும் ஆணிகளையும் எலும்புகளையும் ப்லேடையும் வச்சு கட்டியிருக்காங்க, இன்னும் வேறென்னவெல்லாம் நடந்துதுன்னு யாருக்கு தெரியும். ஒருவேளை அதுல ஒரு ஸ்மைலி முகமும் இருக்கலாம். அவங்க பின்னால என்ன வைச்சிருக்காங்கன்னு எனக்கு தெரியாது.

**ஆன்கர்பெர்க்:** உங்களுடைய ஜீவனை காக்கும்படிஅவங்க அப்படி செய்ய வேண்டியிருந்தது. .

**எஸ்லே:** நிச்சயமா நா சக்கர நாற்காலியில்தான் இருந்திருக்க வேண்டும். அவங்க சொன்னாங்க இந்த அறுவை சிகிச்சையை செய்துக்கோங்க இல்லன்னா நீங்க முடக்கு வாதத்தோடதான் இருக்க வேண்டியிருக்கும். அதனால், இந்த தெரிந்தெடுப்பை குடுத்ததா, என்ன சொல்வீங்க, “அறுவை சிகிச்சையை முயற்சிக்கிறேன்.” அப்ப, அந்த அறுவைசிகிச்சையில் முன்னேற்றம் இருந்தது, அது ரொம்ப நீண்டு போயிருந்தது. எல்லா மருத்துவர்களிடமும் பேசிப்பார்த்தேன். அவங்களுக்கு ஒரே கருத்துதான் இருந்தது. ஜீவனோடிருக்க சிலவற்றை வெட்ட வேண்டும். ஜீவனோடிருப்பதற்கு இந்த அறுவைசிகிச்சை செய்திடும் ஒரு நண்பர் வெர்ஜினியாவில் இருக்கிறார், எனக்கு இருந்த அதே பிரச்சனைதான் அவருக்கும் இருந்தது, தண்டுவடம் அகன்று தீராத வலியை உண்டாக்கும் முதுகெலும்பு சுருக்கம். அவரை அழைத்து நான் கேட்டேன், “நா என்ன செய்யறது? எனக்கு சொல்லப்பட்ட கருத்துகளை அவருக்கு தெரியப்படுத்தினேன் அதற்கு அவர் சொன்னார், “நிச்சயமா அத நீ செய்யாத. இததான் நீ செய்ய விரும்புரேன்னா அதற்கு என்ன காரணம் என்றார்.” அதற்கு நா சொன்னே, “ஆல்ரைட், தாம், நீங்க சொன்னதாலதான் நா இத செய்யப்போரேன்னு சொன்னேன்.” எனக்கு இருந்த அதே அறிகுறிகள்தான் அவருக்கும் இருந்தது. ஜீவனோட இருக்கும்படிதான் அவர் இந்த சிகிச்சையை மேற்கொண்டார் இப்ப என்ன அவர் கூர்ந்து கவனித்து வருகிறார் ஏன்னா இந்த அறுவைசிகிச்சை செய்வதில்

அவருக்கு உடன்பாடில்ல, ஏன்னா எல்லா கேசுளையும் நூறு சதவிகிதம் பலன் கொடுக்காது. எந்த மருத்துவருக்கும் மேலாக அவரை நான் நம்புகிறேன், ஏன்னா அறுவை சிகிச்சையின் அனைத்து கோணங்களும் அவருக்கு தெரியும். அவரே அந்த வலியை அனுபவித்திருக்கிறார். அதையே மற்றவர்களுக்கும் அவர் செய்துவருகிறார். எல்லா விதத்திலும் அவர் என்னோடு அடையாளப்படுத்தப்படுகிறார்.

**ஆன்கர்பெர்க்:** அவருக்கு தெரிந்துவிட்டது.

**எஸ்லே:** அவருக்கு தெரிந்திருந்தது. கிறிஸ்துவுக்கு தெரிந்திருந்தது. இந்த மகா பிரதான ஆசாரியர் அதை பற்றி தெரிந்திருப்பதால் எந்த பிரச்சனையோ வலியோ சோர்வோ வாழ்வில் நம்மை மேற்க்கொள்ள வாய்ப்பேயில்லை. அதனால, தைரியமாக கிருபாசனத்தண்டையிலே சேர்ந்திடலாம்.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், ஒரு நிமிடம் இருங்க. நாம திரும்பி வந்து தொடரலாம். இப்போதும் ஒரு இடைவேளை எடுத்துகொள்வோம், நாம திரும்பி வந்ததும் பார்க்க இருப்பது, இதுதான், நம்முடைய பிரதான ஆசாரியரை குறித்த காரியங்கள். சரி, இது உங்களுக்கு எப்படி பொருந்தும்? ஓகே, இது எப்படி இருக்கும்? உங்களுடைய இக்கட்டான சூழ்நிலைகளில் இது உங்களுக்கு எப்படி உதவியிருக்கிறது, சரியா, சொல்லொண்ணா வலிவேதனையின் நடுவில் நீங்களும் தேவனும்

மட்டும் தனித்திருக்கும் நிலையில் இது எப்படி செயல்பட்டது? ஆல்ரைட், திரும்ப வந்ததும் அதை பற்றி பார்க்கலாம். இணைத்திருங்கள்.

*****

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், வந்துவிட்டோம். இப்போதும் நாம் ஜோனி எரிக்சன் டாடா வோடும் மற்றும் நம்மத்தியில் இருக்கும் Dr. மைகேல் எஸ்லே வோடும் பேசிக்கொண்டிருக்கிறோம். தொடர்ந்து தான் வலியோடு வாழ்ந்துகொண்டிருந்ததை பற்றி மைகேல் இப்போது நம்மோடு பகிர்ந்துகொண்டிருக்கிறார், எங்க உதவிக்காக திரும்பினாலும் பலனில்லை. அதற்கு பிறகு இயேசுவிடம் திரும்பினீர்கள். நம்முடைய பலவீங்களை குறித்து அவர் பரிதபிக்கிரவறாக இருக்கிறார் என்பதை பற்றி சொல்லிக்கொண்டிருந்தீர்கள். இன்னும் அதை பற்றி தெளிவாக சொல்லுங்கள்.

**எஸ்லே:** அதாவது, தீராத வலியோடு வாழ்வது, அதை விளக்குவது கடினம். ஒரு அளவுகோலை உங்களிடம் கொடுக்கிறார்கள்: 10, இதில், நீங்க இப்ப குதிக்கவேண்டும், 1இருந்தா, நல்லா இருக்கும். சில சமயங்களில் நா 6, 7, 8க்கு மேல போகற நிலையில் இருப்பேன். நா 6 வது நிலையில் இருந்தா தேவனை துதித்துகொண்டு சீரான செயல்பாட்டில் இருந்திடுவேன். அது தெளிவாக இருக்காது, ஆனா உங்களுடைய நிலையை பற்றி உங்களுக்கு தெரியும். மற்றவர்களிடம்

சொல்லுவேன், உங்க தலை வலி அதிகமா இருக்கும் போது மற்ற எல்லா வேலைகளையும் நிறுத்திவிட்டு முதல்ல போய் நீங்க ஐபுப்ரோபின் எடுப்பீங்கள்ள, அது சுமார் குறைந்தது 10 அல்லது 12 மடங்கு அதிகமா, இருந்தா எப்படி இருக்குமோ அந்த வேதனையோடு தான் நான் வாழ்ந்துட்டு இருக்கேன். என்னோட பற்களை கடித்துகொல்வேன். வயதானவன் போல தோன்றுவேன். என் பிள்ளைங்க சொன்னாங்க, “அப்பா, நீங்க முந்தி இருந்ததற்கு இப்ப பார்த்த ரொம்ப வயசானவரா தெரியிறீங்க.” “அந்த உற்சாகமான வார்த்தைகளுக்கு நன்றி.” போக போக அது நமக்கு பழக்கமாகிடும்.

ஆனா கிறிஸ்துவை அறிந்துகொள்வது, அவருடைய தெய்வத்துவம், அவர் எடுத்த அவதாரம். தேவ மனிதர் பாடுபட்டார். அவர் சோர்ந்துவிட்டார். அவருக்கு பசியுண்டாயிற்று. அவர் சிலுவையில் அறையப்பட்டார். குண்டாயிசங்களை சகித்துகொண்டார். நம்முடைய சிந்தனைகளுக்கு அப்பாற்பட்ட விதத்தில் மகா பிரதான ஆசாரியர் சரீரத்தில் காயங்களை சகித்தார், அதோடு இறையியல் புரிந்துகொள்ளுதல்களுக்கு அப்பாற்பட்ட விதத்தில் ஆவிக்குரிய ரீதியிலும் அவர் காயப்பட்டார். அதனால இந்த பிரதான ஆசாரியர் நமக்கு இருக்கிறார் என்பதை நாம் யோசிக்கும்பொழுது, கற்பனை செய்கிறேன் - சுத்திகரிக்கப்பட்ட கற்பனை காட்சி - எனது சார்பில் கிறிஸ்து நின்று, ஜோனியின் சார்பில், உங்களுடைய சார்பில்,

பிதாவிற்கு முன்பாக அவர் நின்று ஒவ்வொரு பெயரையும் சொல்லி பரிந்து பேசிக்கொண்டிருக்க்றார். இந்த மனு அவதாரம் எடுத்த வந்தவர் மட்டுமே இந்த பரிதபிப்பை புரிந்துகொள்வார், நமக்காய் பரிதபிப்பார். நம்முடைய பலவீனங்களை அவர் அறிந்திருக்கிறார்.

அதனால MS சா இருந்தாலும், முப்பெருநரம்பு வியாதிகள், கல்லீரல் பாதிப்பாக இருந்தாலும், பைத்தியமாக இருந்தாலும், சித்த பிரம்பையாக இருந்தாலும், தீராத வேதனையாக இருந்தாலும், அவருக்கு தெரியும். அதை பற்றி எல்லாமே அவருக்கு தெரியும். நம்முடைய சாயலை இந்த கிறிஸ்துவின் சாயலாக்கிட, பரலோகத்தில் வீற்றிருக்கும் ஒரு தெயவாதீனமுள்ளவராகவோ, சிங்காசனத்தில் வீற்றிருப்பவராகவோ, இல்லாமல் தேவ மைந்தனாக வந்தார் - முழுவதும் தேவன், முழுவதுமான மனிதன் - பிதாவிற்கு முன்பாக நமக்காக பரிந்துபேசிகொண்டிருக்கிறார். அவருடைய ஆவியானவர் எனக்குள் வாசமாக இருக்கிறார் என்பதை தெரிந்திருந்தால் போதும். மற்றவைகளை நான் புரிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை, ஆனால் அவரே எனக்குள் வாசமாக இருக்கிறார். அதனால் இப்போது நான், தேவனுடைய குமாரனாக, ராஜாவின் புத்திரனாக, அவரோடு தொடர்புடையவனாயிருக்கிறேன், கிறிஸ்துவின் ஆவியின் நிமித்தமாக, அவருடைய பாடுகளில் பங்குள்ளவனாக நான் பிதாவோடு இணைகிறேன். சின்காசந்த்தண்டைக்கு என்னால் செல்ல முடியும்.

**ஆன்கர்பெர்க்:** ஒரு உதாரணத்தை இப்போது சொல்கிறேன். நா வர்ணனையாளர்களின் தொகுப்பு நூலை வாசித்தேன், அங்க நா ஒரு விஷயத்தை கவனிக்க நேர்ந்தது, வர்ணனையாளர்களில் ஒருவர் இப்படியாக சொல்கிறார், “சரியான சுருதியில் இருக்கும் இரண்டு பியானோக்கள் இருக்கிறது. ஒரு பியானோல ஒரு நோட்ட தட்டினால், அடுத்த பியானோளையும் இந்த ஒளியினுடைய எதிரொலி புறப்பட நேரிடும். இயேசு பரிபூரணமான நபர். அவர் புரிந்துகொள்வார். அவருக்கு உணர்வுகள் இருக்கிறது. நாம வேதனையை உணரும்போது, நம்முடைய வேதனையோடு அவரும் தாக்கப்படுகிறார். நாம உணருகிற அதே உணர்வைதான் அவரும் பெருகிரவராக இருக்கிறார். தொடர்ந்து போயிட்டே இருக்கு.

**எஸ்லே:** மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை.” அதுமட்டுமில்ல நாம சங்கீதங்களை வாசிக்கும்போது, மேசியாவை பற்றிய சங்கீதங்கள், கெத்சமனே தோட்டத்தில் அவர் உதவிக்காக கதறிடும் நேரம், சிலுவையில் உதவி வேண்டும் என்று அவர் வியாகுலமடந்தார் - “என் தேவனே, என் தேவனே ஏன் என்னை கைவிட்டீர்?” சில சமயங்களில் அதை அதிக ஆவிக்குரியதாக பார்க்கிறோம், அதாவது, மிஞ்சின இறையியல் பார்வை, அதனால சில நேரத்தில் கிறிஸ்துவை பற்றி நினைக்கும் போது, இரும்பு மனிதர், சூப்பர்மேனாக பார்க்கிறோம். அவர்

தேவனாக இருக்கிறார், மனிதனாக இருக்கிறார். அதை கவனிக்க தவறுகிறோம். ஒரு மனிதனாக பார்க்கும்போது, ஒரு மனிதனுக்கு உண்டான அனுபவம்தான் அவருக்கு இருந்தது, நம்முடைய பாவங்களுக்கு விலைசெலுத்தினார். மரிக்க அவர் முன்வந்தார், அவர் ஒரு முழு மனிதனாக இருந்தார். அதிலிருந்து உயிரோடு எழும்புவதற்கு அவர் தேவத்துவத்தின் முழுமையை ஒன்டிருந்தார், ஜீவனடைந்தார். அதனால், கிறிஸ்துவை பற்றிய கண்ணோட்டத்தை மாற்றிக்கொள்ள வேண்டும், நமக்குள் வாசமாயிருப்பதை அறிந்துகொள்ளவேண்டும், நிறைய விஷயங்கள் தெரியாது, ஜான், ஆனா இது இரண்டுக்கும் ஒரு தொடர்பு இருக்குன்னு எனக்கு தெரியும். மோசமான சூழ்நிலையில் நான் இருக்கும்போது, இருண்ட குகைக்குள் 3 காரியங்கள் என்னுடன் இருந்தது. அங்க இருந்தது நான், தேவன் அப்பறம் வலி.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், இதுதான் இப்போதைய கேள்வி: நீங்க சில காரியங்களை செய்யும்படியாக அவர் உங்களிடம் கூறினார். அதோட நீங்க சொன்னீங்க மாத்திரைகள் வேலை செய்யாத போது மற்ற எந்த மருந்துகளும் உங்களுக்கு கைகுடுக்காத போதுதான், நீங்க இந்த ஸ்தானத்திற்கு வந்தீங்க. எதனால?

**எஸ்லே:** போகறதுக்கு வேற எந்த இடமும் எனக்கு இல்ல. நா போகும்படியான இடம் வேற எதுவும் கிடையாது. நா அவரிடம் கிட்டி

சேரும்படியாக இருந்தேன். உங்களுக்கு ஒரு காலமும் உதவ முடியாத அந்த மருந்து மாத்திரைகளை தேடி அதற்கு பின்னால ஓடி என்ன பிரயோசம் இருக்குது? அப்படியிருந்தா, நல்லது, ஆனா எனக்கு சரியா வரல. மருந்துங்களை சாப்பிட்டு மன அழுத்தத்தோடும், சோர்வோடும் இருந்ததுதான் மிச்சம். அவரிடம் தான் ஜீவ வார்த்தைகள் இருக்கிறது. அதனால நா மகா பிரதான ஆசாரியரிடம் வந்துவிட்டேன். அந்த வருகையில்தான், 2 காரியங்களை பெற்றுக்கொண்டேன், எபிரேயரின் ஆக்கியோன் கூறுகிறார்: தேவையுள்ள நேரத்தில் நாம் இரக்கத்தையும் கிருபையையும் பெற்றுகொண்டேன்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, தைரியத்தோடே கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம் என்று சொல்லுகிறார், தைரியத்தோடு போகணும், மைகேல்.

**எஸ்லே:** ஆமா, ஆமா,

**ஆன்கர்பெர்க்:** அதனால நீங்க 2 காரியங்களை பெற்றுகொள்ள முடியும். அந்த இரண்டு காரியங்கள் என்னென்ன?

**எஸ்லே:** ஒன்று, கிருபை. நீங்க பொதுவா கேட்பதை விட சற்று வித்தியாசமா அத நா விளக்கி சொல்ல விரும்புகிறேன். நா, ஆக்கினைக்கு பாத்திரமான தகுதியற்ற ஒருவருக்கு அளிக்கப்படும் தயவு என்று சொல்லுவேன். ஏன்னா கிருபை என்பது ஏதோ தேவன் சாதாரணமாக கொடுத்த ஒன்று கிடையாது. நாம ஆக்கினைக்கு

உட்பட்டவர்கள். எந்த ஹான்ட் பிரேக்கும் நடத்துனரும் இல்லாத நரகத்தை நோக்கி பாய்ந்து செல்லும் ரயிலில் பயணிப்பவர்களாயிருந்தோம், அதை தடுத்த நிறுத்த யாரும் இல்லை. கிருபை என்பது ஆக்கினைக்கு பாத்திரமான தகுதியற்ற ஒருவருக்கு அளிக்கப்படும் தயவு. இரக்கம் எனபது தடுத்து நிறுத்துதல் அல்லது நிராகரிக்கப்பட்ட தீர்ப்பு. சரி, சுமார் பதினெட்டு வயது நிரம்பிய ஒரு வாலிபன் கார் ஓட்ட விரும்புகிறான் ஆனா அவனுடைய குணமும் நடவடிக்கையும் சரிகிடையாது, ஒருவேளை அவனுக்கு நா புத்தம் புதிய காரையும், அதனுடைய சாவியையும் ஒரு கிரெடிட் கார்டையும் குடுத்தா எப்படி இருக்கும், அதுதான் கிருபை.(சிரிப்பு) ஆனா அவனுக்கு நா இரக்கமளித்து, அவனிடம் சொல்றே, உனக்கு தெரியுமா, உன்னுடைய நிலை இருக்க வேண்டிய தரத்தில் இல்லை. அதனால நீ இந்த இந்த காரியங்களை செய்யவேண்டும். நான் உனக்கு இரக்கம் காட்டுகிறேன். இந்த காரை நீ இதற்கு பயன்படுத்தி கொள்ளலாம். சோ கிருபை என்பது ஆக்கினைக்கு பாத்திரமான தகுதியற்ற ஒருவருக்கு அளிக்கப்படும் தயவு. அது சரியான நிலையில் இருக்கிறது. இரக்கம் என்பது நிராகரிக்கப்பட்ட தீர்ப்பு, அல்லது நிராகரிக்கப்பட்ட விளைவுகள். அவர் இரக்கம் இல்லாதவராக இருந்திருந்தால் நாம எப்பவோ வருத்தெடுக்கப்பட்டிருப்போம்.

**ஆன்கர்பெர்க்:** ஏன்னா ஒவ்வொருநாளும் பாவம் செய்கிறோம்.

**எஸ்லே:** ஒவ்வொருநாளும், எல்லா நேரத்திலும். ஒவ்வொரு நாளும் பாவம் செய்கிறோம் என்று உணர்வு இல்லன்னா, எல்லா நேரமும் செய்கிறோம், அது ரொம்ப பெரிய பாதிப்பை உண்டாக்கும்.

ஏன்னா நமது.. செயல்கள், சிந்தனைகள், பார்வைகள், இச்சை, பேராசைகள், பொருளாசை, இவை எல்லாவற்றோடும் ஒவ்வொரு நாளும் நாம் போராடிக்கொண்டிருக்கிறோம். இரக்கம் என்பது நிராகரிக்கப்பட்ட தீர்ப்பு, நிராகரிக்கப்பட்ட தீர்ப்பு. அதுதான், உண்மையில், சிலுவையில் செய்யப்பட்ட காரியம். இந்த இரண்டு காரியங்களை புரிந்துகொள்வதற்கும் என்னுடைய வேதனையின் விளிம்பிலிருந்து குதித்து நா பரிணாம மார்டம் அடைவதற்கும், திரும்பி போகும்படி ஒரு இடம் இருந்தது. நான் தனிமையை தெரிந்தெடுத்திருக்கலாம் அல்லது, "தேவனே, நா தைரியத்தோடு உமக்கு முன்பாக வர வேண்டுமே, ஏன்னா என்னுடைய அனுபவங்கள் எனக்கு சொல்வது வேரு விதமாயிருக்கிறது. உம்மை நோக்கி நான் வருகிறேன் என்பேன்." இதன் ஆக்கியோன் எதற்காக இப்படி சொல்லுகிறார், "அவரிடத்தில் வாருங்கள். உங்கள் அறிக்கையை உறுதியாய் பற்றிக்கொண்டிருங்கள்." நமது கருத்து: "தேவனே நீங்க விளையாட்டு காட்டலதான. ஏன் என்று கேள்விக்கு பதில் இல்லாதது ஏன். நீங்க எனக்காக ஒன்றுமே செய்வதில்லை. மற்ற ஜனங்கள் எல்லாரும் ஆசீர்வாதமா இருக்காங்க. நீங்க என்ன ஆசீர்வதிப்பதே இல்ல." இந்த மாதிரியான எண்ணம் எங்கயும் கொண்டுசெல்வதில்லை.

அதனால தான் அவரிடம் ஏன் என்ற கேள்வியை நான் கேட்பதில்லை. எப்படி என்ற கேள்வியைத்தான் முன்வைக்கிண்டேன். எனக்கு விசுவாசத்தை தாரும், துணிச்சலை தாரும், கிருபையை தாரும், படுக்கையை விட்டு எழும்பும் பெலத்தை தாரும், நான் செயல்பட வேண்டும், அதற்கு நம்பிக்கையோடு உம்மை விசுவாசிக்கிறேன்.

**ஆன்கர்பெர்க்:** உங்களுடைய நண்பரின் சாட்சியை பற்றி சொல்லியிருக்கிறீர்கள் அவர் MRI யின் போது அவருக்கு இருந்த வியாதியினால் துவண்டுபோனார், ஆனால் சரியான நேரத்தில் கிடைத்த கிருபையால் மீண்டுவந்தார். அதை பற்றி சொல்லுங்கள்.

**எஸ்லே:** நண்பருக்கு மூளை புற்றுநோய் இருந்தது, கிளியோப்ளாஸ்ட்டொமாஸ், ஆஸ்ட்ரோசைடோ மாஸ் மூளையில் உண்டாவது. அது இருந்தா ஏதோ ஒரு வருஷம் வாழ முடியும், அல்லது அதற்கு மேல கொஞ்ச நாள் தான்.

**ஆன்கர்பெர்க்:** ஆமா, அவருடைய நிலை G-4, அதனால் அவர் இக்கட்டான நிலையில் இருந்தார்.

**எஸ்லே:** G-4, காமனைஸ்ட் கதிர்வீச்சுகள். உங்களுக்கு ஒரு முக உரையை குடுத்து மேசையோடு சேர்த்து போல்ட் போடுவாங்க. அவருக்கும் இந்த மூளை புற்றுநோயின் உபகரணம் இருந்தது. அவர் ஒரு குறிப்பிட்ட வேத பகுதிகளை மனப்பாடம் செய்துகொண்டு தனக்கு தானே சொல்லிக்கொள்வார். அவரை அவர்கள் இந்த

படுக்கையில் படுக்க வைத்து தலையை மேசையோடு இணைத்து கட்டு விட்டார்கள். அவரால் அசைய முடியாது. அவர் எங்கிட்ட சொன்னார், “மைகேல், என்னால விவரிக்க முடியாத அளவுக்கு என்னோடு மூக்கு நமிக்க துவங்கியது, அரைமணிநேரத்துக்கு இந்த குழாயை நான் சகித்திருக்க வேண்டும்.” அதோடு அவர் சொன்னார், “என்னால வெளிய வர முடியல. மேல கைய தூக்கி என்னால் எதையுமே செய்ய முடியல. இதனுடைய செய்யல பாடுகளை என்னால நிறுத்த முடியல.” அவர் சொன்னார், “நா பைத்திய காரனைப்போல ஜெபித்து கொண்டிருந்தேன், “தேவனே, இப்ப எனக்கு கிருபை தேவை, இந்த சமயத்திற்கான கிருபை.” அவர் தொடர்ந்து சொன்னார், “ நா அனுபவ பூர்வமான இறையியலாளர் கிடையாது, ஆனா என்னுடைய மூக்கின் நமித்தல் நின்றுபோனது.”

நிச்சயமா சொல்வேன் ஜோனியும் நானும் இதுக்கு மேல தாங்க முடியாது என்று இக்கட்டான சூழ்நிலைகளில் என்ன நடந்தது என்று பல சம்பவங்களை சொல்ல முடியும், திடீருன்னு ஏதோ நடந்தது, எங்களோடு தொடர்ந்த அனுபவங்கள். ஒருவேளை அது ஒரு வசனமாக, அல்லது ஒரு சிந்தனையாக இருக்கலாம், அதனால் நின்றுபோயிருக்கும், ஆனா அந்த பிடிக்குள் இருக்கும்போது நா நினைப்பேன், “மனுஷருக்கு நேரிடுகிற சோதனையே அல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை.” ஆனா, உங்களுக்கு தெரியுமா, சில நேரங்கள்ல நமக்கு தேவை படும்போது அவர் வர

மாட்டார், ஆனா சரியான நேரத்துல அவரே வந்து நிற்பார். அதைதான் அசைக்க முடியாத விசுவாசத்தின் நிலை என்பதன் அர்த்தம். என்னுடைய அனுபவங்கள் என்னை பற்றி சொல்லும் அல்லது என்னுடைய தேவன் பற்றி சொல்லிடும். மேலும் நா வேதனையில் இருக்கும்போது நான் சொர்ந்துபோயிருக்கும்போது மன அழுத்தத்தில் துவண்டு போய் இருக்கும்போது, நான் திரும்பவும், இங்க வந்து நிற்பேன். இன்னும் அருகில் செல்கிறேன், நான் நம்புகிறதை பற்றிகொண்டிருக்கிறேன், தைரியமாக அவர் முன்பு செல்கிறேன். ஆண்டவரே, எனக்கு ஓய்வு தேவை, எனக்கு இடைவெளி தேவை.

**ஆன்கர்பெர்க்:** ஆல்ரைட், அடுத்த வாரம், இதை பற்றி மேலும் பல விஷயங்களை பார்க்க இருக்கிறோம் சோனியும் மைக்கேலும் இந்த காரியத்தை பகிர்ந்திட குழுவாக செயல்பட இருக்கிறார்கள், அப்போது நாம் மன அழுத்தம் மற்றும் சொர்வடைவத்தை பற்றி பார்க்க இருக்கிறோம், அதோடு இந்த தீராத வேதனையும் இருக்கும். ஏன்னா உங்களுக்கு ஒரு வியாதி அல்லது நோய் இருந்தால் அதோடு கூடவே இந்த வலியும் வேதனையும் இருக்கும், ஆமா, அந்த நேரத்தில் சொர்ந்திபோவதும் மன அழுத்தத்திற்குள் போவதும் சுலபமாக நடக்கும். நீங்க இரண்டு பேரும் அந்த கட்டத்தில் இருந்திருக்கீங்க. இன்றைக்கு நிகழ்ச்சியை பார்த்துக்கொண்டிருக்கும் நேயர்களில் பலரும் அந்த நிலையில்தான் இருக்கிறார்கள், சரி. நேயர்களே, அடுத்த வாரமும்

தவறாமல் பாருங்கள், இந்த தலைப்புகளில் தான் நம்முடைய உரையாடல் அமைந்திருக்கும்.

*****

எங்களுடைய தொலைக்காட்சி நிகழ்சிகளை காண

இலவச ஜான் அன்கெர்பெர்க் நிகழ்ச்சி ஆப்பை பதிவிறக்கம் செய்திடுங்கள்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுகொள்வதற்கான ஜெபம் @JAshow.org

@2015 A.T.R.I.